DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.562/2018**

**P.W.20**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | பாலதம்புராஜ் |
| Father Name | : | பாலன் |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | 65 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.03.2026.

( 1, 2 மற்றும் 7 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டார்கள். 11வது எதிரி இறப்பு. 3, 4, 6, 8, 10, 13, 14, 15, 16, மற்றும் 17 எதிரிகள் ஆஜர். 5, 9, 12 மற்றும் 18 எதிரிகள் ஆஜர் இல்லை. 5, 9, 12 மற்றும் 18 எதிரிகள் சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது ஆண்டாள்புரம், பழைய மீனாட்சி மில் காலனியில் வசித்து வருகிறேன். நான் பழக்கடை வைத்து நடத்தி வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன சுரேஷ் என்பவரை தெரியும். கடந்த 30.01.2013ம் தேதி இரவு சுமார் 08.00 மணியளவில் நான் கொடைக்கானல் சென்றடைந்தேன். நான் அங்கு இந்த வழக்கு சம்பவத்தில் இறந்துபோன சுரேஷ் உடன் அறையில் தங்கிவிட்டு மறுநாள் காலை அவருடன் மதுரைக்கு திரும்பி வந்துவிட்டேன். நான் மேற்படி சுரேஷ் என்பவரை அவருடைய வீட்டில் விட்டுவிட்டு வந்துவிட்டேன். எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது. நான் போலீஸ் விசாரணையிலும் மேற்கூறிய விபரத்தை தான் சொன்னேன்.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு**

வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் )

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :</u>

நான் போலீஸ் விசாரணையின் போது சுரேஷ் 28.01.2013ம் தேதி இரவு சுமார் 09.30 மணியளவில் நான் வெளியூருக்கு போறேன் நீயும் வரையா என்று கேட்டார் என்றும், எனக்கு உடல்நிலை சரியில்லாததால் வர இயலவில்லை என்று கூறினேன் என்றும், பின்னர் கொடைக்கானலுக்கு புறப்பட்டு வருமாறு சொன்னார் என்றும், நான் வாடகை காரை பிடித்து 30.01.2013ம் தேதி மாலை சுமார் 04.00 மணியளவில் கொடைக்கானலில் அவர் தங்கியிருந்த கால்டன் லாட்ஜில் போய் அவரை சந்தித்தேன் என்றும், அங்கு அவருடைய நண்பர்கள் பசும்பொன் முத்தையா, ரவி, ஆனந்தராஜ் மற்றும் சங்கீத் ஹோட்டல் உரிமையளார் குமார் ஆகியோர்கள் அங்கு இருந்தார்கள் என்றும், 31.01.2013ம் தேதி காலை சுமார் 10.30 மணியளவில் கொடைக்கானாலில் இருந்து புறப்பட்டு மதுரைக்கு வந்துவிட்டோம் என்றும், பின்பு அவரவர் வீட்டிற்கு சென்றுவிட்டோம் என்றும், 31.01.2013ம் தேதி பொட்டு சுரேஷ் என்பவரின் டிரைவர் மணிகண்டன் எனக்கு போன் மூலம் பொட்டு சுரேஷ் என்பவரை சத்திய சாய் நகர் மெயின் ரோடு, முருகன் கோவில் ரோடு சந்திப்பில் இரண்டு மோட்டார் சைக்கிள், டாடா ஏஸ் குட்டி யானை வண்டியில் அருவாள், கத்தி, வாள் மற்றும் உருட்டு கட்டை போன்ற ஆயுதங்களுடன் வந்து மாறி மாறி வெட்டியும், குத்தியும் கொலை செய்துவிட்டு தப்பி ஓடிவிட்டதாக என்னிடம் கூறினார் என்றும், நான் அதிர்ச்சி அடைந்து அங்கு போய் பார்த்த போது அவர் கொலை செய்யப்பட்டு இரத்த வெள்ளத்தில் கிடந்தார் என்றும், பின்னர் GRHக்கு ஆம்புலன்ஸில் கொண்டு சென்றார்கள் என்றும், பிரேத பரிசோதனை முடித்து மூலக்கரை சுடுகாட்டிற்கு நல்லடக்கம் செய்துவிட்டு நான் வீட்டிற்கு வந்துவிட்டேன் என்றும், மற்ற விபரங்களை தினசரி நாளிதழில் பார்த்து விபரம்

தெரிந்துகொண்டேன் என்று போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :– இல்லை.**

**மறு விசாரணை –** இல்லை.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.03.03 17:11:32 +0530